**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

**முன்னிலை : திருமதி.ஜா.ஆஃப்ரீன் பேகம், M.Com., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நத்தம்.

2026ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 07ம் நாள் திங்கட்கிழமை

திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம், ஆவணி திங்கள் 21ம் நாள்

**சுருக்கமுறை விசாரணை வழக்கு எண்.69/2025**

CNR No.TNDG100004132025

குற்றமுறையிடுபவர் – காவல் சார்பு ஆய்வாளர்
நத்தம் காவல் நிலைய
குற்ற எண்.459/2024

எதிரியின் பெயர் – முத்துக்குமார் 24/2024 த/பெ.இலங்காமணி

**Case Summary**

Statement as per rule 106 of Criminal rules of practice, 2019

| S.No. | Description | Details |
|---|---|---|
| 1. | Serial Number | S.T.C.No.69/2025 |
| 2 | Name of the Police station and Crime Number | Natham Police Station Cr.No.459/2024 |
| 3 | Name of the accused | முத்துக்குமார் |
| 4 | Father's Name | இலங்காமணி |
| 5 | Occupation | கூலி |
| 6 | Residence | கொத்தலரிவிளை, ஸ்ரீவைகுண்டம், தூத்துக்குடி மாவட்டம். |
| 7 | Age | 24/2024 |

Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,

Digitally signed by Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Date: 2026.09.07 10:57:56 +0530

<table>
<tr><td>8</td><td>Date of occurence</td><td>19.08.2024</td></tr>
<tr><td>9</td><td>Date of Complaint</td><td>19.08.2024</td></tr>
<tr><td>10</td><td>Date of apprehension</td><td>19.08.2026</td></tr>
<tr><td>11</td><td>Date of release on bail</td><td>19.08.2024</td></tr>
<tr><td>12</td><td>Date of commitment</td><td>--</td></tr>
<tr><td>13</td><td>Date of questioning and plea of the accused</td><td>On 12.08.2025 charges under Sections 281 and 125(a) of the Bharatiya Nyaya Sanhita (BNS) were framed against the accused. The accused pleaded not guilty, denied the allegations as false, and claimed to be tried</td></tr>
<tr><td>14</td><td>Date of commencement of trial The date of examination – in chief and cross examination of a witness</td><td>
<table>
<tr><td>witness</td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>PW 1</td><td>21.10.2025</td><td>21.10.2025</td></tr>
<tr><td>PW 2</td><td>05.03.2026</td><td>05.03.2026</td></tr>
<tr><td>PW 3</td><td>11.05.2026</td><td>11.05.2026</td></tr>
<tr><td>PW 4</td><td>11.05.2026</td><td>11.05.2026</td></tr>
<tr><td>PW 5</td><td>21.05.2026</td><td>21.05.2026</td></tr>
<tr><td>PW6</td><td>02.07.2026</td><td>02.07.2026</td></tr>
<tr><td>PW7</td><td>11.08.2026</td><td>11.08.2026</td></tr>
</table>
</td></tr>
<tr><td>15</td><td>The date of examination of the accused under section 313 of the code – closed of trial</td><td>18.08.2026</td></tr>
<tr><td>16</td><td>sentence on order</td><td>இறுதியாக, அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில், எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லையென இந்நீதிமன்றம் தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி, இவ்வழக்கின் எதிரி மீது பிரிவுகள் 281, 125(a)BNSன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, மேற்படி எதிரியை 278(1) of BNSS Actன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது.</td></tr>
<tr><td>17</td><td>Service of copy of Judgment or finding on accused</td><td>No. The Judgment was uploaded on CIS portal and made available in E – Courts</td></tr>
</table>

Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,

Digitally signed by Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Date: 2026.09.07 10:58:00 +0530

| | | |
|---|---|---|
| 18 | Explanation of delay | There is no inordinate in the disposal of the case. |
| 19 | Property order | No case property was seized. Hence no property order passed. |

இவ்வழக்கு 06.03.2025ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியாக 28.08.2026 அன்று விசாரணைக்கு வந்த போது அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–I திருமதி. P. அமர்ஜோதி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் திரு.K.மூர்த்தி வழக்கறிஞரும் ஆஜராகி இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்து இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

<u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது சட்டப்பிரிவுகள் 281, 125(a) BNSன் கீழ் நத்தம் காவல் நிலைய ஆய்வாளர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு பின்பு பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 (The Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023) ஆனது சுருக்கமாக BNSS என்றும், பாரதிய நியாய சட்டம் 2023 (The Bharatiya Nyaya Sanhita, 2023) ஆனது சுருக்கமாக BNS என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. <u>குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் –</u>

கடந்த 19.08.2024ம் தேதி அதிகாலை நத்தம் TO கொட்டாம்பட்டி மெயின் ரோட்டில் அம்மாபட்டி பிரிவில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்து இன்டிக்கேட்டர் போட்டு வலது புறம் திரும்பும் போது அதே ரோட்டில்

மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த TN 66 T 8337 என்ற எண்கொண்ட EICHER Busயை ஓட்டிவந்த எதிரி மேற்படி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து வாதி ஓட்டிச்சென்ற பிக்கப் வேனில் வலது பின்புறம் மோதியதில் வாதிக்கு தலை, கை, உடம்பு நெஞ்சு வலது குதிங்கால் ஆகிய இடங்களில் இரத்தக் காயமும், மதுரை வீரன் என்பவருக்கு தலை, கை, கால் ஆகிய இடங்களில் லேசான காயமும் ஏற்படுத்தியதாக நத்தம் காவல் நிலைய ஆய்வாளரால் 16.10.2024ம் தேதி பிரிவுகள் 281, 125(a) BNSன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிரிக்கு எதிரான இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் சுருக்குமுறை விசாரணை வழக்கு எண் – 69/2025 என கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி முன்னிலையானவுடன், அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் BNSS, 2023 பிரிவு 230ன் கீழ் 29.07.2025ம் தேதி அன்று இலவசமாக வழங்கப்பட்டது.

4) குற்றப்பத்திரிக்கையில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைப் பொறுத்து, இரு தரப்புக்கும் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு, இரு தரப்பையும் கேட்டும், எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்தும் ஆவணங்களைப் பரிசீலனை செய்த வகையில் எதிரி மீது பிரிவுகள் 281, 125(a)BNSன் படியும் குற்றம் புரிந்துள்ளார் என்பதற்கு முதல் நோக்கு ஆதாரங்கள் இருந்ததால்

Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Digitally signed by Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Date: 2026.09.07 10:58:09 +0530

12.08.2025ம் தேதியன்று பிரிவு 274 BNSS ன் படி மேற்படி குற்றச்சாட்டுகளை தமிழில் விளக்கி கூறி வினவிய போது எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்து தான் குற்றவாளி இல்லை என கூறினார். எனவே, அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 ஆகியோர்கள் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர். அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் இல்லை. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

6) **இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெரும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு:-**

19.08.2024ம் தேதி 17.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் அ.சா.7 தர்மர் நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது திண்டுக்கல் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அதன் பெயரில் மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த முத்துச்சாமி மகன் குமார்என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து 21.00மணிக்கு நிலையம் வந்து நத்தம் காவல் காவல் நிலைய கு.எண்.459/2024, சட்டப்பிரிவுகள் 281 மற்றும் 125(a) of BNS ஆக வழக்கு பதிவு செய்து அ.த.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கை தயார் செய்து 20.08.2024 அன்று காலை 7.00 மணிக்கு சென்று சாட்சிகள் அ.சா.3 செல்வகுமார் மற்றும் அ.சா.4 மோகன் ஆகியோர்

Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Digitally signed by Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M., Date: 2026.09.07 10:58:12 +0530

முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.த.சா.ஆ.7 மாதிரிவரைபடம் வரைந்து அ.த.சா.ஆ.8 பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். பின்னர் சம்பவ சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 21.08.2024ம் தேதி இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாதிக்கு சொந்தமான TN 36 AE 6475 என்ற பதிவெண் கொண்ட மகேந்திர பிக்அப் வேன் மற்றும் எதிரிக்கு சொந்தமான TN66 T 8337 என்ற பதிவெண் கொண்ட ESSAR பேருந்தையும், மோட்டார் வாகன ஆய்விற்காக அ.த.சா.ஆ.9 மற்றும் அ.த.சா.ஆ.10 வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்துள்ளார். 16.10.2024ம் தேதி மேற்படி வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் பட்டியல் சாட்சி 8 கருப்புசாமி என்பவரை விசாரித்து அ.த.சா.ஆ.11 மற்றும் அ.த.சா.ஆ.12 மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்து நத்தம் அரசு மருத்துவமனை மருத்துவர் அ.சா.5 சதீஸ்குமார் என்பவரை விசாரித்து காயச்சான்றுகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்து வழக்கு விசாரணை முடித்து எதிரி முத்து குமார் என்பவர் மீது 16.10.2024 அன்று சட்டபிரிவுகள் 281 மற்றும் 125 (a) BNS ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

7) பதிவு செய்யப்பட்ட அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான சங்கதிகளை குறித்து பிரிவு 351(1)(b) of BNSS, 2023–ன் கீழ் எதிரியிடம் எடுத்துக்கூறி விளக்கி வினவியபோது அரசுத்தரப்பு சாட்சியம் பொய் என்றும், தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார். அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் இந்த வழக்கில்

Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Digitally signed by Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M., Date: 2026.09.07 10:58:16 +0530

எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிக்கு உரிய தண்டனை வழங்கவேண்டும் என்றும் வாதிட்டார்.

8) எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் எதிரி தரப்பில், வாகனத்தை எதிரி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்ததாக கூறுவது உண்மையல்ல என்றும், வழக்கில் கூறப்படுவது போல விபத்தானது ஏற்படவில்லை என்றும், அரசு தரப்பு சாட்சிகள் எதிரி அதிவேகமாக வாகனத்தை ஓட்டி வந்ததாகவோ, எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாகவோ சாட்சியம் அளிக்கவில்லை என்றும், அ.சா.1ன் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், எனவே எதிரியை வழக்கிலிருந்து விடுதலை செய்து உத்தரவிடவேண்டியது அவசியம் என வாதிடப்பட்டுள்ளது.

9) <u>தீர்மானிக்கப்பட வேண்டிய பொருண்மை:</u>

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

1) அரசு தரப்பில் எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதும்,

2) அவ்வாறு நிரூபணம் செய்யப்பட்டால் எதிரிக்கு கிடைக்கக்கூடிய தண்டனை குறித்த விபரம் என்ன? என்பதேயாகும்.

Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,

Digitally signed by Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Date: 2026.09.07 10:58:24 +0530

**10) <u>தீர்வு</u>**

10.1) எதிரி பொது சாலையில் வாகனத்தை அதிவேகமாக ஓட்டி வந்து கவனக்குறைவாக செயல்பட்டு அதன் விளைவால் குமார் மற்றும் மதுரைவீரன் என்பவருக்கு காயம் ஏற்படுத்தியதாக அரசு தரப்பில் கூறப்படும் நிலையில் அதனை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க வேண்டியது அரசு தரப்பின் கடமையாகும். மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.7 மற்றும் பார்வை மகஜர் அ.த.சா.ஆ.8 ஆகியவற்றின் வாயிலாக சம்பவமானது நத்தம்–கொட்டாம்பட்டி ரோடு, அம்மாப்பட்டி பிரிவு அருகே நடந்தது என்பதை அறிய முடிகிறது. அ.த.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்திலும் சம்பவ இடமாக அ.த.சா.ஆ.7, அ.த.சா.ஆ.8ல் கண்ட இடத்தையே தெரிவிக்கப்பட்டுள்ளது. பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3 செல்வக்குமார் தனது சாட்சியத்தில் "சுமார் 1–1/2 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் காலை சுமார் 7.00 மணியளவில் அம்மாபட்டியிலுள்ள டீக்கடை முன்பாக வைத்து போலீசார் வந்து விபத்து வழக்கு குறித்து விசாரணை செய்தார்கள். பின்னர் விசாரணைக்கு வந்ததற்காக சாட்சியாக கையொப்பம் கேட்டதன்பேரில் நான் கையொப்பம் செய்தேன்" என்று தெரிவித்துள்ளார். அவர் தனது குறுக்குவிசாரணையில் "நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான்" என்று சாட்சியமளித்துள்ளார்.

10.2) பார்வைமகஜரில் கையொப்பம் செய்த மற்றொரு சாட்சியான அ.சா.4 மோகன் தனது சாட்சியத்தில் "சுமார் 7 மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் என் கடையின் முன்பாக போலீசார் வந்து விபத்து வழக்கு குறித்து

Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Digitally signed by Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Date: 2026.09.07 10:58:29 +0530

விசாரணை செய்தார்கள். பின்னர் விசாரணைக்கு வந்ததற்காக சாட்சியாக கையொப்பம் கேட்டதன்பேரில் நான் கையொப்பம் செய்தேன்" என்று தெரிவித்துள்ளார். அவர் தனது குறுக்குவிசாரணையில் "நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான்" என தெரிவித்துள்ளார். எதிரி தரப்பில் சாட்சிகள் கையொப்பம் செய்த தேதி, நேரம், இடம் மற்றும் போலீசார் என்ன செய்தார்கள் என்பது தொடர்பாக குறித்து தெளிவாக சாட்சியம் அளிக்காத காரணத்தால் அவர்களது சாட்சியம் ஏற்புடையதல்ல என்று வாதிட்டார். சாட்சிகள் அம்மாபட்டியில் உள்ள டீக்கடையில் இருந்தபோது போலீசார் விபத்து தொடர்பாக சம்பவ இடம் வந்து விசாரித்ததாக தெரிவித்துள்ளார்கள். மேற்படி டீக்கடையானது மாதிரி வரைபடத்தில் காட்டப்படவில்லை என்ற வாதம் முன்னிட்டபோதிலும் இது குறித்து புலன்விசாரணை அதிகாரி வாயிலாக உரிய முறையில் எடுத்துரைக்கப்படவில்லை. எனவே சம்பவ இடம் சென்று புலன்விசாரணை அதிகாரி ஆவணங்கள் தயார் செய்துள்ளார் என்றும், சம்பவ இடத்தில் விபத்து நடந்தது என்பதும் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

10.3) அதேபோல் எதிரி ஓட்டி சென்ற TN 66 T 8337 என்ற எண்கொண்ட EICHER Busயை மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை அ.த.சா.ஆ.12-ல் "Front W/S glass pressing inside of crack, front Bumper, cover body, Grill, front Right Side H/L and Indicator any damaged" சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், விபத்தானது வாகன இயந்திர கோளாறினால் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதை காண முடிகிறது.

Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Digitally signed by Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Date: 2026.09.07 10:58:33 +0530

இதன்மூலம் வாகனத்தின் முன்புறம் தான் மற்றும் வாகனத்தின் வலது பக்க முகப்பு விளக்கு மற்றும் திசை காட்டும் விளக்கு ஆகியவற்றில் சேதாரம் ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. விபத்தில் சம்பந்தப்பட்ட மற்றொரு வாகனமான TN 36 AE 6475 மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை அ.த.சா.ஆ.11–ல் front w/s glass pressing inside and crack, front Grill, front Right side wheel arch Fender, Rear Door Body pressing preside & dent, Rear Body dent, Rear Bumper, Bonnet dent, Engine bed hit, Engine Assembly slightly dislocated from its original Position, front Right side suspension Spring Assembly leaf cut போன்ற சேதாரங்கள் ஏற்பட்டுள்ளது என்றும், விபத்தானது வாகன இயந்திர கோளாறினால் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதை காண முடிகிறது.

10.4) விபத்தில் காயமடைந்த குமார் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தனது சாட்சியத்தில் அவர் அன்றையதினம் அதிகாலை 3.30 மணியளவில் அம்மாபட்டி பிரிவு அருகில் தனது நான்கு சக்கர பிக்கப் வாகனத்தை ஓட்டிச் செல்லும்போது அடையாளம் தெரியாத தனியார் டிராவல்ஸ் பேருந்து இடித்ததாக கூறினார். அவர் தனக்கு வலதுகாலில் வலி இருப்பதாகவும், ரத்தம் வடிவதாகவும் கூறினார். வலதுகாலை அசைப்பதில் சிரமம் இருப்பதாக கூறினார். அவரை நான் பரிசோதனை செய்தததில் அவருக்கு பின்வரும் காயங்கள் ஏற்பட்டிருந்தது. 1. வலது கால் பாதத்தில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. 2. வலது கணுக்காலில் வலியுடன் கூடிய வீக்கம் இருந்தது. 3. இடது தலைப்பகுதியில் 1x1 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயம் இருந்தது.

Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Digitally signed by Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Date: 2026.09.07 10:58:42 +0530

அவருக்கு முதலுதவி சிகிச்சை செய்யப்பட்டு, மேல்சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைத்தேன். அவர் அங்கு 19.08.2024 மற்றும் 20.08.2024 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் சாதாரண காயங்கள் என்று கருத்துரை வழங்கி சான்றழித்தேன் என்று தெரிவித்துள்ளார்.

10.5) மேலும் விபத்தில் காயமடைந்த மற்றொரு நபரான மதுரைவீரன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தனது சாட்சியத்தில் அவருக்கு தனது தலையிலும், இரண்டு கால் முட்டியிலும் வலியிருப்பதாகவும், ரத்தம் வழிவதாகவும் கூறினார். அவர் அடிபட்ட சமயத்தில் சுயநினைவை இழந்ததாகவும் கூறினார். நான் அவரை பரிசோதித்தபோது சுயநினைவுடன் இருந்தார். 1) தலையின் உச்சிப்பகுதியில் 2 x 2 செ.மீ அளவுள்ள ரத்தக்கட்டு காயமும், 2) 2x2 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயமும் காணப்பட்டது. 3) இரண்டு கால்முட்டியிலும் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. 19.08.2024 உள்நோயாளியாக சேர்ந்து சிகிச்சை பெற விருப்பம் தெரிவிக்காமல் தன்னிச்சையாக சென்றுவிட்டதால் அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் குறித்து கருத்துரை வழங்க இயலாது என்று சான்றளித்ததாக சாட்சியம் அளித்துள்ளார். இதன்மூலம் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது போல் சம்பவ இடத்தில் வாகன விபத்து ஏற்பட்டுள்ளது என்பதும், அந்த விபத்தில் குமார் மற்றும் மதுரைவீரன் என்பவருக்கு சாதாரணகாயம் ஏற்பட்டது என்பதும் நிரூபணம்

Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Digitally signed by Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Date: 2026.09.07 10:58:47 +0530

செய்யப்பட்டுள்ளது. ஆனால் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது போல் விபத்து ஏற்பட்டுள்ளதா என்பதை காண வேண்டியதுள்ளது.

10.6) விபத்தானது எதிரியின் அதிவேகம், கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டுள்ளதா என்பதும், எதிரி தான் TN 66 T 8337 என்ற எண்கொண்ட EICHER Busயை அதிவேகமாக இயக்கி, வாதி ஓட்டி வந்த TN 36 AE 6475 என்ற மகேந்திரா பிக்கப் வண்டியில் மோதி விபத்தை ஏற்படுத்தினாரா என்பதையும், வழக்கில் தெரிவிக்கப்பட்டுள்ள விதத்தில் விபத்து நடந்துள்ளதாக என்பதையும் ஆராய்ந்து பார்க்கும் போது, அ.த.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் "19.08.2024ந் தேதி அதிகாலை 03.00 மணிக்கு நத்தம் to கொட்டாம்பட்டி மெயின் ரோட்டில் அம்மாபட்டி பிரிவில் வலதுபுறம் திரும்ப இண்டிகேட்டர் போட்டு மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்து தெற்குப்பக்கம் திரும்பும்போது அதே ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்த TN 66 T 8337 Essar Busயை ஓட்டி வந்த எதிரி அதிக வேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து வாதி ஓட்டிச்சென்ற பிக்கப்வேனில் வலது பின்புறம் மோதியதில் நிலை தடுமாறி இரண்டு முறை பிரண்டு ரோட்டின் வலது பக்க பள்ளத்தில் கவிழ்ந்து விட்டது. அதனால் எனக்கு தலை, கை, உடம்பு, நெஞ்சு, வயிறு, குதிங்கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. மதுரைவீரனுக்கு தலை, கை, கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

10.7) அ.சா.1 தனது சாட்சியத்தில் "கடந்த 19.08.2024ம் தேதி இரவு 2.30 முதல் 3.00 மணியளவில் மேட்டுப்பட்டியிலிருந்து திருப்பூர் சென்று

Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Digitally signed by Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Date: 2026.09.07 10:58:51 +0530

குன்னாரம்பட்டியில் உள்ள நண்பரின் வீட்டு சாமான்களை ஏற்றிக் கொண்டு திருப்பூரிலிருந்து வந்து கொண்டிருந்தபோது, அம்மாபட்டி விலக்கு வலது புறத்தில் இண்டிகேட்டர் போட்டு போகும்போது எங்களுக்கு பின்புறமாக இருந்து வந்த டூரிஸ்ட் பேருந்து மோதி விபத்து ஏற்படுத்தியது. அதில் எங்கள் வாகனம் இரண்டு முறை உருண்டு பக்கத்தில் இருந்த வேப்பமரத்தில் மோதி கீழே விழுந்தது" என சாட்சியமளித்துள்ளார். மேலும், அவர் தனது குறுக்குவிசாரணையில் " பாலமுருகன் என்பவரும் வந்தார். பாலமுருகனுக்கு காயம் எதுவும் இல்லை" என சாட்சியமளித்துள்ளார். மேற்படி பிக்கப் வாகனத்தில் பயணம் செய்த மற்றொரு நபர் மற்றும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 மதுரைவீரன் தனது சாட்சியத்தில் "சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் நள்ளிரவு சுமார் 3.00 மணியளவில் மகேந்திரா பிக்கப் வேனை குமார் என்பவர் ஓட்ட நான் அவருடன் அமர்ந்து திருப்பூரிலிருந்து குன்னாரம்பட்டியை நோக்கி சென்று கொண்டிருந்தோம். நண்பர் ஒருவரின் வீட்டிற்கு வீட்டு உபயோகப் பொருட்களை ஏற்றிக் கொண்டு சென்றோம். குன்னாரம்பட்டி பிரிவில் திரும்பும்போது எங்களுக்கு பின்புறம் வந்த ஆம்னி பேருந்து (Sleeper Bus) ஒன்று திடீரென மோதி விபத்து ஏற்படுத்தியதில் எங்களது பிக்கப் வேன் பள்ளத்தில் கவிழ்ந்து விட்டது. எனக்கு அதில் தலையிலும், கையிலும் சாதாரண காயம் ஏற்பட்டது" என சாட்சியமளித்துள்ளார். அவர் தனது குறுக்குவிசாரணையில் "பாலமுருகன் எங்கு அமர்ந்து வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நானும், டிரைவர் மட்டும்தான் வந்தோம். பாலமுருகன் என்பவர் எங்களுடன் வண்டியில் வரவில்லை என்றாலும் வண்டியில் சென்ற எங்கள் இருவருக்கும் மட்டும்தான் காயம்

Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Digitally signed by Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Date: 2026.09.07 10:58:58 +0530

ஏற்பட்டது என்றாலும் பாலமுருகனுக்கு எந்த ஒரு காயமும் ஏற்படவில்லை என்றாலும் சரிதான். பாலமுருகனுக்கு காயம் ஏற்பட்டதாக சொல்லியிருந்தால் தவறு என்றால் சரிதான்" என சாட்சியமளித்துள்ளார்.

10.8) சம்பவத்தை கண்ணுற்ற மற்றொரு சாட்சியான அ.சா.6 பாலமுருகன் தனது சாட்சியத்தில் "சுமார் 1–1/2 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் அதிகாலை 02.40 முதல் 3.00 மணியளவில் அம்மாபட்டி விலக்கு அருகே பிக்கப் வேனில் நானும், ஓட்டுநர் குமார் மற்றும் மதுரை வீரன் ஆகியோர் திருப்பூரிலிருந்து எங்கள் ஊருக்கு எங்கள் வீட்டு சாமான்களை ஏற்றிக் கொண்டு நத்தம் நோக்கி நாங்கள் கிழக்கு திசையில் வந்தபோது அதே திசையில் எங்களுக்கு பின்புறம் Essar டிராவல்ஸ் பஸ் வந்தது. அம்மாபட்டி விலக்கு அருகே எங்கள் வேனை வலதுபக்கம் திருப்பும்போது மேற்படி பேருந்து மோதி விபத்து ஏற்பட்டது. மேற்படி பேருந்து வேகமாக வந்து மோதியது. மேற்படி விபத்தில் எனக்கு தலையில் உடைந்த கண்ணாடி துகள்கள் குத்தி ரத்தக்காயம் ஏற்பட்டது. கை, கால்களில் சாதாரண காயமும் ஏற்பட்டது. ஓட்டுநர் குமாருக்கு இடது கால் உடைந்து எலும்பு முறிவு ஏற்பட்டது. மதுரை வீரன் என்பவருக்கு தலையில் கண்ணாடி துகள்கள் குத்தி ரத்தக்காயம் ஏற்பட்டது" என சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 தன்னுடன் மதுரை வீரன் மற்றும் பாலமுருகன் ஆகிய இருவர் வந்ததாக தெரிவித்துள்ளார். ஆனால் அ.சா.2 மதுரை வீரன் தனது குறுக்கு விசாரணையில் "நானும் டிரைவர் மட்டும்தான் வந்தோம். பாலமுருகன் என்பவர் எங்களுடன் வண்டியில் வரவில்லை" என்று முரண்பட்டு தெரிவித்துள்ளார். அ.சா.6 தனது சாட்சியத்தில் "நான் வந்த வாகனத்தில் எந்த பக்கத்தில் இருந்தேன்

Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Digitally signed by Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Date: 2026.09.07 10:59:01 +0530

என்றால் வேனில் உள்ள கேபினில் இடதுபுறத்தில் உட்கார்ந்து இருந்தேன்" என்று தெரிவித்துள்ளார். அ.சா.6–ற்கு காயம் ஏற்பட்டதாகவோ, அவர் மருத்துவசிகிச்சை எடுத்துக்கொண்டதாகவோ ஆவணங்கள் தாக்கல் இல்லை. இதன் மூலம் அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.6ன் சாட்சியங்களுக்கிடையே அதிக முரண்பாடுகள் இருப்பது தெரியவருகிறது.

10.9) மேலும் அ.சா.1 தான் 5 நாட்கள் உள்நோயாளியாக திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக தெரிவித்துள்ளார். ஆனால், மருத்துவர் அ.சா.5 தனது சாட்சியத்தில் அ.சா.1 19.08.2024 மற்றும் 20.08.2024 ஆகிய இரு நாட்கள் மட்டுமே சிகிச்சை பெற்றதாக கூறியுள்ளார். மேலும் அ.சா.1 தனது சாட்சியத்தில் எனக்கு இடது பக்க நெஞ்சில் ரத்தம் உறைந்துவிட்டது. வலது கால் பாதத்திற்கு மேல் பலத்த வெட்டுக் காயம் ஏற்பட்டு எலும்பு தேய்ந்துவிட்டது. மேலும் என் தலையில் உடைந்த கண்ணாடிகள் குத்தியது. தலையில் பல இடங்களில் கண்ணாடி குத்தி காயங்கள் இருந்தது. என் முதுகில் பலத்த வெட்டுக் காயம் ஏற்பட்டு தையல் போடப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். ஆனால் அ.சா.5 மருத்துவர் மேற்படி நபரை பரிசோதித்த போது வலது காலில் சிராய்ப்பு, வீக்கம் மற்றும் தலையில் சிறு சிராய்ப்பு மட்டுமே இருந்ததாக தெரிவித்துள்ளார். அ.சா.6 பாலமுருகன் தனக்கு உடைந்த கண்ணாடி குத்தி காயங்கள் ஏற்பட்டதாக கூறுகிறார். ஆனால், அ.சா.5 மருத்துவர் பாலமுருகனுக்கு எந்த காயமும் இருந்ததாக தெரிவிக்கவில்லை, அவருக்கு சிகிச்சையும் அளிக்கப்படவில்லை என்பதை அறிய முடிகிறது.

Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Digitally signed by Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Date: 2026.09.07 10:59:05 +0530

10.10) அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் "...சம்பவ இடமானது அம்மாபட்டி பிரிவிற்கு செல்வதற்காக மேற்கிலிருந்து கிழக்காக சென்று வலதுபுறமாக தெற்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான்.... நான்தான் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் செயல்பட்டு ரோட்டின் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி திடீரென திருப்பியதால்தான் விபத்து ஏற்பட்டு எனது வாகனம் பள்ளத்தில் விழுந்தது என்றால் சரியல்ல.... நான் விபத்து நடந்த பகுதிக்கு இதற்கு முன்பு வந்தது இல்லை என்றால் சரிதான். எனக்கு அந்த இடம் பற்றி தெரியாது என்பதால் தான் அம்மாபட்டி பிரிவில் திடீரென திரும்பினேன் என்றால் சரியல்ல... **எனக்கு பின்னால் வந்த வாகனத்தை எனது முன் பக்க கண்ணாடி மூலமாகவோ அல்லது வேறு விதமாகவோ பார்க்கவில்லை என்றால் சரிதான்,** நான் கண்ணாடியில் பார்க்கும் பொழுது பின்புறம் எந்த வண்டியும் வரவில்லை, இரு சக்கர வாகனம் தான் சென்றது. எனது வண்டிக்கு பின்புறம் எந்த வாகனத்தையும் நான் பார்க்காத நிலையில் கனரக வாகனத்தை எதிரி வண்டி ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல..." என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது சாட்சியத்தில் "நாங்கள் ஏற்றி சென்ற பொருட்கள் என்ன ஆனது அதற்கு சேதாரம் ஆனதா என்பது குறித்து போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை" என்றும், அ.சா.3 தனது சாட்சியத்தில் "இடது புறத்திலிருந்து வலது புறத்திற்கு திடீரென வாகனத்தை திருப்புவது தவறு என்றால் சரிதான். நாங்கள் வந்த வாகனத்திற்கு என்ன ஆனது என்றால் இரண்டு முறை கவிழ்ந்து பள்ளத்தில் சென்று வேப்பமரத்தில் மோதி நின்றது. பள்ளத்தில் தலைகீழாக

Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Digitally signed by Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Date: 2026.09.07 10:59:13 +0530

வண்டி கவிழ்ந்தது என்றால் சரிதான். நாங்கள் வந்த வாகனம் தான் அதிவேகத்தில் வந்து திடீரென வலது புறமாக திரும்பியதில் தான் வண்டி கவிழ்ந்து பள்ளத்தில் விழுந்தது என்றால் சரியல்ல" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள். புலன்விசாரணை அதிகாரி அ.சா.7 தனது சாட்சியத்தில் "இரவு நேரங்களில் வாகனத்தை வலது பக்கமாக திருப்பும் போது பின்புறம் வரும் வாகனங்களின் லைட் வெளிச்சம் தெரியும் என்றால் சரிதான். அ.சா.1 குமார் என்பவர் அவரது அஜாக்கிரதையால் வாகனத்தை திடீரென்று சாலையின் இடது புறத்திலிருந்து, வலது புறமாக குறுக்கே திரும்பினார் என்றால் சரியல்ல. அ.சா.1 ஓட்டி வந்த பிக்கப் வாகனம் ஆனது எந்தப் பக்கத்தில் இரண்டு முறை உருண்டது என்றால் வலது புறமாக உருண்டுள்ளது. வாகனம் வலது புறமாக உருண்டது என்பதை மாதிரி வரைபடத்தில் அந்த இடத்தை குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் சரிதான்.... மாதிரி வரைபடம் வாயிலாக பிக்கப் வேன் ஆனது சாலையின் நடுப்பகுதியில் வந்ததாக தெரிய வருகிறது என்றால் சரிதான், வலது பக்கமாக திரும்புவதற்காக மத்திய பகுதிக்கு வந்துள்ளது" என்று தெரிவித்துள்ளார். மேற்படி சாட்சியங்களின் அடிப்படையில், விபத்திற்கான முழு பொறுப்பையும் எதிரி மீது சுமத்த முடியாது. அ.சா.1 திடீரென வாகனத்தை இடதுபுறத்திலிருந்து வலது பக்கமாக திருப்பினார் என்ற வாதம் முன்னிடப்பட்டுள்ளது. எனவே, எதிரிக்கு சாதகமான நியாயமான சந்தேகம் உருவாகிறது.

10.11) எதிரி தரப்பில் பேருந்தில் இருந்த நபர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும், இதன் மூலம் புலன்விசாரணை அதிகாரி உரிய முறையில் புலன்விசாரணை செய்யவில்லை என்பது புலனாகிறது

Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Digitally signed by Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Date: 2026.09.07 10:59:17 +0530

என்றும் வாதங்களை எடுத்துரைத்தார். அவரது வாதத்தை பரிசீலனை செய்கையில் புலன்விசாரணை அதிகாரி அ.சா.7 தனது சாட்சியத்தில் "பேருந்தில் வந்த நபர்களுக்கோ, பேருந்து ஓட்டுனருக்கும் காயம் ஏதும் ஏற்பட்டதாக எனது விசாரணையில் தெரிய வரவில்லை என்றால் சரிதான். பேருந்தில் இருந்த நடத்துனர் மற்றும் கிளீனர், மேலும் பயணிகள் ஆகியோரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நபர்களை விசாரித்து இருந்தால் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று தெரிய வந்திருக்கும் என்றால் சரியல்ல" என தெரிவித்துள்ளார். மேற்படி நபர்கள் யாரையும் சாட்சியாக விசாரணை செய்யாதது வழக்கிற்கு பாதகமாகவே உள்ளது. மேலும் எதிரி தரப்பில் அரசு தரப்பு சாட்சிகள் எதிரியை அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்கவில்லை என்று வாதிட்டார். அ.சா.1 தனது முதல் விசாரணையில் "இவ்வழக்கின் எதிரியை நான் பார்த்ததில்லை. ஆனால் அவர் பெயர் முத்துக்குமார் என்று கேள்விப்பட்டேன்" என்று தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளார். அ.சா.6 தனது சாட்சியத்தில் "வழக்கு எதிரியை நான் பார்த்தது இல்லை" என்று கூறியுள்ளார். விபத்து இரவில் நடந்ததாலும், எதிரியை சம்பவ இடத்தில் சாட்சிகள் அடையாளம் காணாத நிலையிலும், எதிரி தான் அன்றைய தினம் வாகனத்தை ஓட்டி வந்தார் என்பதை நிரூபிக்க ஓட்டுநர் பட்டியல் அல்லது அட்டவணை எதுவும் ஆஜர்படுத்தப்படவில்லை. இது வழக்கை முற்றிலும் பாதிப்பதாக உள்ளது.

Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,

Digitally signed by Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Date: 2026.09.07 10:59:21 +0530

10.12) எதிரி தரப்பு வழக்கறிஞர் அவர்களால் கீழ்கண்ட முன்தீர்ப்புகளை சுட்டிக்காட்டி வாதங்களை முன்னிட்டார்.

i) 2017 (2) L.W (Crl.) 113 – Senthil Kumar vs The station House Officer, Valavanur PS, Villupuram District என்ற வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. Except PW2 and PW4 other witnesses have not deposed anything about the rashness and negligence act of the accused. Sudden crossing of the road cannot be ruled out. Rash or negligent act on part of accused cannot be inferred merely because the deceased met with an unfortunate accident. In every accident case, for the negligence and rashness, the principles of res loquitur cannot be applied. Every case has to be decided on the basis of its own facts to assess whether the rider or driver of the vehicle was rash or negligent in driving the vehicle, which resulted vital injuries to the pedestrians. Therefore, burden of the prosecution to prove the guilt of the accused under Section 337 or 304(A) 1.P.C. will not be releived by mere showing the death of pedestrian. The standard of proof should be beyond all reasonable doubt. If these requirements are fulfilled, then the accused person will have no escape route. When the pedestrain suddenly crosses the road, even though the vehicle was driven in a slow speed, it is difficult to control the vehicle in such a situation. These aspects are common for everyone.

ii) 2022-2-L.W. (Crl) 127 – Sakthilvel Vs state Represented by the Inspector of Police, Mettur PS, Salem in Crl.R.C.No.685 of 2017 என்ற வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் கீழ்க்கண்டவாறு

Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Digitally signed by Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Date: 2026.09.07 10:59:28 +0530

எடுத்துரைக்கப்பட்டுள்ளது. I.P.C., Sections 279, 337, 304-A Evidence act, Section 114-A ₹Res ipsa loquitur Nothing to suggest petitioner had driven the bus in a rash or negligent manner held: none of the witnesses spoke about either rashness or negligence on the side of the petitioner. Rough sketch prepared by Investigating officer not marked - Accused cannot be convicted on permissive inference under section 114 using principle of "Res ipsa loquitur". To what extent principle of res ipsa loquitur can be applied to establish culpable negligence or rashness culpable mere damage cannot be the sole basis to infer culpable rashness or negligence, by applying the principle of 'res ipsa loquitur. Thus, from the above Judgements of the Hon'ble Apex Court the following principles emerge:

(a) The Doctrine of "Res ipsa loquitur" cannot be applied in Criminal cases in the same manner as it is applied in torts.

(b) In the tort of negligence inference may be drawn from proved circumstances by applying the rule if the cause of the accident is unknown and no reasonable explanation as to the cause is coming forth from the defendant.

(c)Such an inference cannot be made in Criminal cases firstly because there is a presumption of innocence and the burden of proving the charge rests on the prosecution. Secondly, the nature of proof required in criminal case is "proof beyond reasonable doubt" unlike in civil proceedings where a fact can be established by preponderance of probability.

iii) 2023-2 L.W. (Crl) 735 - Sudhakar Vs state Represented by the Inspector of Police, Panthanallur PS, Thanjavur in Crl.R.C.(MD) No.244 of 2019

Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Digitally signed by Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Date: 2026.09.07 10:59:32 +0530

and Crl.M.P.(MD) No.3560 of 2019 என்ற வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. I.P.C., Section 304A, rash and negligent driving held: mere speed cannot be projected as the case of high speed. None of the witnesses stated about the rashness and negligence on the part of the accused. Mere evidence that the bus was driven by the driver in a high speed is not sufficient to prove the evidence under Section 304A. contradictions between prosecution witnesses with regard to scene of occurrence – prosecution failed to prove the rash and negligent driving of the accused.

மேற்கண்ட தீர்ப்பில் கூறப்பட்டுள்ள வகைமுறைகள் இவ்வழக்கின் பொருண்மைகளுக்கு பொருந்துவதாக அமைந்துள்ளது. மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் எதிரி தான் சம்பவத்தன்று பேருந்தை ஓட்டி வந்தார் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை. விபத்து எதிரியின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால் தான் நடந்தது என்பது போதிய ஆதாரங்களுடன் நிரூபிக்கப்படவில்லை. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் உள்ள முரண்பாடுகள் எதிரிக்கு சாதகமான நியாயமான சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன. எனவே, சந்தேகத்தின் பலன் எதிரிக்கு கிடைக்கக்கூடியதாகும்.

இறுதியாக, எதிரி மீதான பிரிவுகள் 281, 125(a) BNSன் கீழ் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, எதிரியை மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை பிரிவு 278(1) of

Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Digitally signed by Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Date: 2026.09.07 10:59:36 +0530

BNSS Actன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரி இவ்வழக்கில் கொடுத்துள்ள பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

**<u>பிரிவு 498 BNSSன் கீழான உத்தரவு:</u>**

இவ்வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் பிரிவு 498 BNSS–ன் கீழ் உத்தரவு இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் அவையறிய 07.09.2026ம் தேதி பகரப்பட்டது.

Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,

Digitally signed by Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Date: 2026.09.07 10:59:43 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், நத்தம்.

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள் –</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 21.10.2025 | திரு.குமார் ( புகார்தாரர்) |
| அ.சா.2 | 05.03.2026 | திரு.மதுரை வீரன் ( காயம்பட்ட சாட்சி) |
| அ.சா.3 | 11.05.2026 | திரு.செல்வகுமார் ( பார்வை மகஜர் சாட்சி) |
| அ.சா.4 | 11.05.2026 | திரு.மோகன் ( பார்வை மகஜர் சாட்சி) |
| அ.சா.5 | 21.05.2026 | திரு.சதீஸ்குமார் ( மருத்துவர்) |
| அ.சா.6 | 02.07.2026 | திரு.பாலமுருகன் ( கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.7 | 11.08.2026 | திரு.தர்மர் (புலன் விசாரணை அதிகாரி) |

**<u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள்–</u>**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 / அ.சா.1 | 19.08.2024 | புகார் வாக்குமூலம் |
| அ.த.சா.ஆ.2 / அ.சா.3 | 20.08.2024 | பார்வைமகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் |
| அ.த.சா.ஆ.3 / அ.சா.4 | 20.08.2024 | பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சிக் கையொப்பம் |
| அ.த.சா.ஆ.4 / அ.சா.5 | 19.08.2024 | விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் (குமார்) |
| அ.த.சா.ஆ.5 / அ.சா.5 | 19.08.2024 | விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் (மதுரைவீரன்) |
| அ.த.சா.ஆ.6 / அ.சா.7 | 19.08.2024 | முதல்தகவல்அறிக்கை |
| அ.த.சா.ஆ.7 / அ.சா.7 | 20.08.2024 | மாதிரிவரைபடம் |
| அ.த.சா.ஆ.8 / அ.சா.7 | 20.08.2024 | பார்வைமகஜர் |
| அ.த.சா.ஆ.9 / அ.சா.7 | 21.08.2024 | வேண்டுக்கோள் கடிதம் ( TN 36 AE 6475) |
| அ.த.சா.ஆ.10 / அ.சா.7 | 21.08.2024 | வேண்டுக்கோள் கடிதம் (TN 66 T 8337) |
| அ.த.சா.ஆ.11 / அ.சா.7 | 16.10.2024 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை ( TN 36 AE 6475) |
| அ.த.சா.ஆ.12 / அ.சா.7 | 16.10.2024 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 66 T 8337) |

**<u>அரசுத் தரப்பு சான்றுபொருட்கள் :</u>**– இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் :</u>–**

**இல்லை**

Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,

Digitally signed by Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Date: 2026.09.07 10:59:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் நத்தம்.

**குறிப்பு –**

1) இவ்வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

2) இவ்வழக்கு விசாரணையின் போது எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் அழைத்து விசாரணை செய்யப்படவில்லை.

3) இவ்வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,

Digitally signed by Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Date: 2026.09.07 10:59:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் நத்தம்.